# The Hero and Heroine Concepts in Aandal's Hymns

**P. Dinesh**
*Research Scholar, Department of Tamil*
*University College, Trivandrum, Kerala*

**Dr. P. Santhi**
*Professor, Department of Tamil*
*University College, Trivandrum, Kerala*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346622

**Abstract**

*Being two eyes in Tamil life, both internal and external, inner life was considered to belong to everyone. Men and women could be united physically and mentally. In the expression of inner life, unique qualities were defined by society for women. In this way, if Andal dedicated her inner life to Thirumal, if she saw her devotion towards Thirumal as love, she considered Thirumalai as the hero and herself as his heroine, and surrendered herself completely with her mind. This article examines the sins of the hero and heroine in the songs sung by Andal, who worshipped the Lord.*

**References**

1. Srinivasan, M. – Naalayira Divya Prabandham, Tamil University, Thanjavur, 2017.
2. R. Narendra Kumar. – Aandal: The Poet's Journey in Search of God, Kavya Publications, 2015.
3. K.A. Manavalan. – Aandal (Series on the Sculptors of Indian Literature), Sahitya Akademi.
4. Mukkur Lakshmi Narasimhachariar. – Kanna Kanden Thozhi, Ananda Vikatan Publications.
5. Kurinji Gnanavaithiyanathan. – Stories of the Twelve Azhwars, Prema Prasuram Publications.
6. Sri Aandal. – Thiruppavai – Commentary, Gita Press.
7. Website: https://www.tiruppavai.com
8. (Thiruppavai related site)
9. Website: https://www.thiruvilliputtur.com
10. (Thiruvilliputhur information site)

# ஆண்டாள் பாடல்களில் நாயகன் நாயகி பாவம்

*பா. தினேஷ்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

*முனைவர் ப. சாந்தி*
பேராசிரியர், தமிழ்த்துறை
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழர் வாழ்க்கையில் இரு கண்களாக திகழ்வது அகமும், புறமும் அகவாழ்வு எல்லோருக்கும்உரியதாக கருதப்பட்டது ஆணும் பெண்ணும் உடலாலும் உள்ளத்தாலும் இணையக் கூடிய அகவாழ்வு வெளிப்பாட்டில் பெண்ணுகென தனி குணங்கள் சமூகத்தால் வரையறுக்கப்பட்டிருந்தன அவ்வகையில் ஆண்டாள் தன் அகவாழ்வை திருமாலுக்கு அர்ப்பணித்ததால் திருமாலின் மீதான பக்தியை காதலாக கண்டாள். திருமாலை நாயகனாகவும் தன்னை அவனின் நாயகியாகவும் கருதி தன்னை மனதால் முழுமையாக ஒப்படைத்தாள். ஆண்டாள் இறைவனை உருகிப் பாடிய பாடல்களில் நாயகன் நாயகி பாவம் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

திருமாலை கடவுளாகக் கொண்ட பலர் பக்திப் பாடல்களைப் பாடி இறையருளும் பெற்று இறைவனோடு கலந்தார்கள். அதில் பலர் பக்தியை காதலாக உருவாக்கி இருக்கிறார்கள் இறைவனோடு இரண்டறக் கலந்த நிலையிலே அவர்களுடைய பக்தி அனுபவத்தை காதல் அனுபவமாக பாடி இருக்கின்றனர். வைணவ அடியார்களுள் சிறப்பிடம் பெற்றவர் ஆண்டாள் ஏனெனில் இறைவன் மீது கொண்ட பக்தி காதலாக மாறி இறைவனை நாயகனாக பாவித்து தன்னை அவனது நாயகியாக எண்ணி பாடல்களைப் பாடி நோன்பு நோற்று இறுதியில் இறைவனை அடைகின்றாள். ஆண்டாள் பாடல்களில் காணல் ஆகும் நாயகன் நாயகி பாவத்தைக் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆண்டாளின் தோற்றமும் வாழ்க்கையும்

ஒரு குழந்தையாக, ஆண்டாள், துளசிச் செடியின் கீழ் கிடந்தபோது, மதுரைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஊரில் வசித்து வந்த விஷ்ணுசித்தர் என்னும் அந்தணர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டாள். இவ்வந்தணர் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு மலர்கள் கொய்து கொடுப்பதைத் தமது கடமையாகக் கொண்டவர். தனக்கெனக் குடும்பம் எதுவும் இல்லாதிருந்த நிலையிலும், குழந்தை தனக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை எனக் கருதி வளர்த்து வரலானார். ஆயர் குல பெருமை அறிந்த பெரியாழ்வார் அக்குழந்தைக்கு இட்ட பெயர் கோதை. இளம் வயதிலேயே சமயம், தமிழ் என்பன தொடர்பில் தனக்குத் தெரிந்த அனைத்தையுமே விஷ்ணுசித்தர் கோதைக்குச் சொல்லிக் கொடுத்தார். இதனால் கோதை, இளம் வயதிலேயே கண்ணன் மீது மிகுந்த பக்தியுணர்வு

கொண்டவராகவும் இருந்தார். சிறு வயதிலேயே கண்ணன் மீதிருந்த அளவற்ற அன்பு காரணமாக அவனையே மணம் செய்துகொள்ளவேண்டுமென்றஎண்ணத்தையும் வளர்த்துக் கொண்டார். தன்னைக் கண்ணனின் மணப்பெண்ணாக நினைத்துப் பாவனை செய்துவந்தார். கோயிலில் இறைவனுக்கு அணிவிப்பதற்காக விஷ்ணுசித்தர் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் தான் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாக தானிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து பின்னர் திரும்பவும் கொண்டுபோய் வைத்துவந்தார். இதனால் கோதை சூடிய மாலைகளே இறைவனுக்கும் சூடப்பட்டன. ஒருநாள் இதனை அறிந்து கொண்ட விஷ்ணுசித்தர் கோதையைக் கடிந்து கொண்டார். அவள் சூடிய மாலையை ஒதுக்கிவிட்டுப் புதிய மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார். அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றி கோதை அணிந்த மாலைகளே தனக்குப் உகப்பானவை எனவும் அவற்றையே தனக்குச் சூடவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இதனாலேயே "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி" என்றும் இறைவனையே ஆண்டவள் என்ற பொருளில் ஆண்டாள் என்றும் போற்றப்படுகிறார். கோதை மண வயதடைந்த பின்னர் அவளுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட திருமண ஏற்பாடுகளை மறுத்து திருவரங்கம் கோயிலில் உறையும் இறைவனேயே மணப்பதென்று பிடிவாதமாக இருந்தார். என்ன செய்வதென்று அறியாது கவலையுடனிருந்த விஷ்ணுசித்தருடைய கனவில் தோன்றிய இறைவன், கோதையை மணப்பெண்ணாக அலங்கரித்து திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துவருமாறு பணித்தார். குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட கோதை, கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டாள் என்பது ஆண்டாள் வரலாறு.

### ஆண்டாள் பாடல்கள்

ஆண்டாள் தனது 15 ஆம் வயதில் இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு முன் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் அதன் இலக்கிய செழுமைக்கும், தத்துவம், பக்தி ஆகியவற்றிற்காக மிகுந்து போற்றப்படுகின்றது. இவரது முதல் படைப்பான திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இத்திருப்பாவையில் ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு பாடப்பெற்ற பாட்டுகளின் தொகுப்பாகும். இவரது இரண்டாவது படைப்பான நாச்சியார் திருமொழி 143 பாடல்களைக் கொண்டுள்ளது. இறைவனை நினைத்துருகிப்பாடும் காதல் ரசம் மிகு பாடல்களின் தொகுப்பாக காணப்படுகின்றது. இது வடமொழியில் எழுதப்பட்ட ஜெயதேவரின் கீத கோவிந்தம் எனும் நூலினை ஒத்ததன்மை உடையதாக காணப்படுகிறது. கண்ணனை மணமுடிப்பதாக ஆண்டாள் பாடியுள்ள நாச்சியார் திருமொழியில் 'வாரணமாயிரம்' புகழ் பெற்றது. ஆண்டாளின் இவ்விரு படைப்புகளும் குறிப்பாக திருப்பாவை நாட்டின் அனைத்து வைணவத்தலங்களிலும் வைணவர்களின் இல்லங்களிலும் தினந்தோறும் ஓதப்பட்டு வருகின்றது. மேலும் வைணவத்தலங்களில் நடைபெறும் விழாக்களிலாயினும் வைணவர்களின் இல்ல விழாவாயினும் வடமொழி மறைகளுக்கு நிகராக தவறாமல் ஓதப்படுகிறது.

### ஆண்டாள் பாடல்களில் நாயகன் நாயகி பாவம்

தன்னை பெண்ணாகவும், இறைவனை ஆணாகவும் கருதி, தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்து பேரின்பம் துய்க்கும் பக்திப் பெருக்கமாகும். இந்த பக்தி முறை, உலகில் உள்ள அனைத்தையும் இயக்கும் இறைவனை

நாயகனாகவும், தன்னை அவனது நாயகியாகவும் உருவகித்து, அந்த உறவின் வழியாக பரமானந்தத்தை உணர்வதாகும். ஆண்டாளின் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி போன்ற பாடல்களில் இந்த பாவம் வெளிப்படும்.

**நாயகி பாவம் என்றால்**

பக்தி இலக்கியத்தில், இறைவனை மையப்படுத்தி பாடல்கள் புனையும்போது, பக்தன் தன்னை இறைவனின் அன்பிற்குரிய நாயகியாக உருவகித்துக்கொள்வது நாயகி பாவம் எனப்படும்.

இந்த பக்தி முறையில், தன்னுடைய உடல், பொருள், ஆவி என அனைத்தையும் இறைவனின் இன்பத்திற்காக மட்டுமே அர்ப்பணித்து, அவனுடன் ஒன்றி வாழும் உணர்வை வெளிப்படுத்துவது முக்கியமானது.

**ஆண்டாள் பாடல்களில் இப்பாவம் வெளிப்படுகிறது**

***திருப்பாவை:*** இதில், ஆண்டாள் கோபியர்களுடன் சேர்ந்து கதிரவனான இறைவனை வணங்குவாள். இறைவனை தனது நாயகனாக உருவகித்து, அவனுடன் உறவாட விரும்புவாள்.

***நாச்சியார் திருமொழி:*** இது ஆண்டாள் ஆழ்ந்த நாயகி பாவத்தின் வெளிப்பாடாக அமைந்திருக்கிறது. இதில் ஆண்டாள், தனது காதலை வெளிப்படுத்தி, இறைவனுடன் உறவாடுவதற்காக பல விதமான செயல்பாடுகளைச் செய்வாள்.

**இதன் சிறப்பு என்ன?**

இந்த பாவம் மூலம், மனித மனம் இறைவனுடன் ஆழமான உணர்வுபூர்வமான உறவை உருவாக்கிக்கொள்ள முடிகிறது என்பதே இதன்சிறப்பு.

இது மனிதனின் மனதின் உளவியல் தேவைகளையும், இறைவனோடு இணைய விரும்பும் ஏக்கத்தையும் வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.

**கண்ணனைக் காதலனாக கொண்டு பாவித்தல்**

கண்ண னென்னுங் கருந்தெய்வங் காட்சி பழகிக்கிடப்பேனைப்புண்ணிற்புளிப்பெய் தாற்போலப் புறநின்றழகு பேசாதே பெண்ணின் வருத்த மறியாத பெருமா னரையிற் பீதக வண்ண வாடை கொண்டென்னை வாட்டடந் தணிய வீசீரே.[1] (627)

பாலா லிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட் டிருந்தேனை வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற் றெல்லாம் பேசாதே கோலால் நிரைமேய்த் தாயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி நீலார் தண்ணந் துழாய்கொண்டென் னெறிமென் குழல்மேல் சூட்டீரே.[2] (628, நாச்சியார் திருமொழி)

**வாரணம் ஆயிரம்**

பகவான் கனவு அனுபவத்தை கொடுப்பதில் சாமானியர்களுக்கு அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்பவும், பக்தர்களின் விஷயத்தில் அவர்களின் ருசிக்கு ஏற்றாற் போலும் அருள்வான் என்பது கருத்து, அதன்படியே ஆண்டாளுக்கு பகவானை திருமணம் செய்துகொள்ள நினைத்த அவளின் எண்ணமே கனவாக வந்தது. ராமனைப் பிரிந்த சீதைக்கு கனவு அனுபவம் இல்லை; ஆனால் எம்பெருமான் கோதைக்கு சொப்பன அனுபவத்தைக் கொடுத்தான். அதனால் ஆண்டாள் சீதாபிராட்டியைவிட விசேஷம் பெற்றவள் என்று பெரிய வாச்சான்பிள்ளை கூறுகிறார்.

**வாரண மாயிரம் சூழ வலஞ்செய்து**
**நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்**
**பூரண பொற்கும் வைத்துப் புற(ர)மெங்கும்**

தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி! நான். என் உயிர்த் தோழியே, ஆயிரம் யானைகள் சூழ்ந்து வர எல்லா குண பரிபூரணனான ஸ்ரீமன் நாராயணன் பிரதட்சணமாக எடுத்தருள, எதிரே பொன்மயமான பூரண கும்பங்களை வைத்து, பட்டினம் முழுவதும் தோரண

ஸ்தம்பங்கள் நாட்டுவதாக நான் கம்பங்கள் நாட்டுவதானநான்கனவில்அனுபவித்தேன். ஆண்டாளைத் திருமணம் செய்துகொள்ள கண்ணன் வருகிறான் என்று ஊரில் பேச்சு ஏற்பட்ட சமயத்திலிருந்து அனுபவிக்க ஆசைப்பட்டதால், அவன் நடந்து வருவதற்கு செய்த அலங்காரங்களையும் கனவிலே கண்டாள். ஆண்டாள் தான் கனவு கண்டதை தோழிகளிடம் சொல்கிறாள். தோழிகள் ஜான வாசத்தில் யார் வந்தார். கிருஷ்ணன்தானே வந்தான் என்று கேட்கிறார்கள். "கோளரி மாதவன்" (நாச்சியார் திருமொழி, 6.2) என்றாள் ஆண்டாள். கிருஷ்ண சரித்திரத்தையே கேட்டு வளர்ந்த ஆண்டாளின் இதயத்தைக் கொள்ளை கொண்ட அவதாரம் நரசிம்மவதாரம். 'கோவிந்தன்' ஆயர்களோடு பழகியவன் என்பதால் திருமண சமயத்தில் என்ன விக்னம் யாரால் வரும் என்று தெரியாததால் அனைவரோடும் தாழநின்று முகம் கொடுத்துக் கொண்டு வந்தான்.

> **"இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்**
> **வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து**
> **மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை**
> **அந்தரி சூட்டக் கனாக்கண்டேன்**
> **தோழி! நான்"**
>
> **(நாச்சியார் திருமொழி, 6,3)**

எம்பெருமான் தன்னை மனிதனாகக் காட்டிக் கொண்டிருந்ததால் வானத்தில் சென்று கொண்டிருந்த இந்திரன் கீழே ராமபிரானை வந்து சேவிக்காமலேயே சென்றான். ஆனால் கிருஷ்ணாவதாரம் மனிதனை மீறிய, தன்னை பரமாத்மாவாகக் காட்டிக்கொண்ட அவதாரம் என்பதால் இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் எல்லாம் கீழே இறங்கி வந்து தரையில் கால் வைத்து திருமண காரியங்களை நிர்வகித்தார்கள். மற்ற தர்ம காரியங்களை நடத்த விடாமல் தேவர்களே தடுப்பார்கள், ஆனால் மணம் ஆனபின் தம்பதிகளாக யாகங்கள் செய்து தங்களுக்கு சமர்ப்பிப்பார்கள் என்பதால் திருமண காரியம் தேவர்கள் முன்னிலையில் நடத்துவார்கள்.

## நிறைவுரை

பக்தி மேலிட்டால் பலர் பலவாறு தங்களை வருத்தி இறைவனை சேர விரும்புவர். அவ்வகையில் இறைவனையே தனது நாயகன், நாயகியாகக் கருதி வேண்டுவதுமுண்டு அவ்வகையில் ஆண்டாள் திருமாலைத்தன் காதலனாக, கணவனாக பாவித்து பாடல்கள் பாடியுள்ளார் நாயகன் நாயகி பாவத்தால் இறைவனை அடைத்தாள் அதன் வெளிப்பாடாக அமைந்த பாடல்களே ஆண்டாளின் திருப்பாவை, நாச்சியார் திருமொழி போன்ற பாடல்கள் ஆகும்.

## உதவிய நூல்கள் மற்றும் வலைதளங்கள்

1. சீனிவாசன் மபெ,நாலாயிர திவ்ய பிரபந்தம் 2017 தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
2. இரா. நரேந்திரகுமார், ஆண்டாள் கடவுளைத் தேடிய கவிஞரின் பயணம், காவ்யா, 2015.
3. கே.ஏ.மணவாளன், ஆண்டாள் (இந்திய இலக்கிய சிற்பிகள் வரிசை), சாகித்ய அகாதமி. 3
4. முக்கூர் லட்சுமி நரசிம்மாச்சாரியார், கனாக்கண்டேன் தோழி, ஆனந்த விகடன் பதிப்பகம்.
5. குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன், பன்னிரு ஆழ்வார்கள் கதைகள், பிரேமா பிரசுரம்
6. ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை விளக்கம், கீதா பிரஸ்.
7. https://ta.wikipedia.org/wiki/ திருப்பாவை
8. https://ta.wikipedia.org/wiki/ திருவில்லிப்புத்தூர்